,

# தஞ்சாவூர் மாநகராட்சி

| Date of Meeting | Serial Number and subject in the Agenda ( MEETING) | Decision of the City Corporation |
|---|---|---|
| 30.09.2020 | **280.** இம்மாநகராட்சியின் ஆணையாளர் அவர்களின் ஆகஸ்ட்–2020ம் மாதத்திய நாட்குறிப்பு மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு :</u><br>பதிவு செய்யலாம். | பதிவு செய்யப்பட்டது |
| 30.09.2020 | **281.** தஞ்சாவூர் மாநகராட்சி பகுதி No.97, அண்ணா சாலை என்ற முகவரியில் உள்ள திரு என்.மணிமாறன் காவேரி லாஜ் செயலாளர் குத்தகை சம்பந்தமாக தஞ்சாவூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS 17/2020-ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கில் இம்மாநகராட்சி சார்பாக மாநகர்மன்ற வழக்கறிஞர் திரு அய்யா வெற்றிச்செல்வன் அவர்கள் ஆஜராகி எதிர் வழக்காட செய்யவும், இவ்வழக்கில் ஏற்படும் செலவுகளை ஏற்கவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>அனுமதிக்கலாம். (ந.க.எண்.8312/2020/MCA5) | அனுமதிக்கப்பட்டது |
| 30.09.2020 | **282.** இம்மாநகராட்சி புதிய மற்றும் தற்காலிக நகர பேருந்து நிலையங்களில் 01.09.2020 முதல் மாவட்டத்திற்குள் பேருந்துகள் இயங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் செய்தி குறிப்பு அறிக்கை எண்.182, நாள் 30.08.2020–ன் கீழ் அனுமதிக்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி இரண்டு பேருந்து நிலையங்களும் பேருந்து நுழைவு கட்டண உரிமத்திற்கு எவரும் ஏலம் கோராததை முன்னிட்டு துறை ரீதியான வசூல் பணி மேற்கொள்ள ஏதுவாக புதிய பேருந்து நிலையம் நுழைவு கட்டண இரசீது புத்தகங்கள் 100–ம், தற்காலிக நகர பேருந்து நிலையம் பேருந்து நுழைவு கட்டண இரசீது புத்தகங்கள் 100–ம் ஆகக்கூடுதல் 200 இரசீது புத்தகங்கள் அச்சிட அச்சக நிறுவனங்களிடமிருந்து குறுகிய கால விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி 2 எண்ணிக்கையிலான விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. | அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை (புத்தகம் ஒன்றுக்கு GST உட்பட) |
|---|---|---|
| 1. | M/s. தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ்,<br>எண்.25A, சுந்தரதாஸ் டேங்க் தெரு, திருச்சி–620 008 | ரூ. 89.60 |
| 2. | M/s. திருச்சி இண்ட்கோ பிரஸ்,<br>எண்.54–D/1, மேல புலிவார்டு சாலை, திருச்சி–620 008 | ரூ. 96.32 |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்ட பணிக்கான உத்தேச செலவினம் ரூ.50,000/—க்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம். பணிக்கான செலவினை 2020—21 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு விலைப்புள்ளி கோரியதை மாமன்றம் ஏற்கலாம்.<br>3) மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள M/s. தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ், திருச்சி நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.<br>4) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, மேற்கண்ட நிறுவனத்திற்கு விநியோக உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.4502/2020/எம்சிஏ5) | |
| 30.09.2020 | 283. | தஞ்சாவூர் மாநகராட்சிக்குச் சொந்தமான மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் இயங்கி வரும் அம்மா உணவகத்தில் உள்ள கேஸ் பைப் லைன் பழுதானதைத் தொடர்ந்து, பணியின் அவசர அவசியம் கருதி M/s. சுந்தரம் ஏஜென்சி, எல்பிஜி கேஸ் பைப் லைன் இன்ஸ்டாஸ் கம்பெனி, கொடிமரத்து மூலை, தஞ்சாவூர் அவர்களின் மூலம் பழுதுகள் சரிசெய்யப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.9730/— திரு சி.திருமுருகன், வருவாய் ஆய்வாளர் (சிறப்பு) IV—ம் பிரிவு அவர்களால் மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அம்மா உணவகப்பணிகள் பாதிப்பு ஏற்படாத விதமாக பணியின் அவசர, அவசியம் கருதி அன்னாரால் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தொகை ரூ.9,730/—ஐ (ரூபாய் ஒன்பது ஆயிரத்து ஏழுநூற்று முப்பது மட்டும்) திரு சி.திருமுருகன், வருவாய் ஆய்வாளர் (சிறப்பு) IV—ம் பிரிவு அவர்களுக்கு வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்ட அம்மா உணவக அவசர அவசிய பணிக்கான செலவினம் ரூ.9,730/—க்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம். பணிக்கான செலவினை 2020—21 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று சம்பந்தப்பட்ட அலுவலருக்கு தொகை வழங்கப்பட்டதை மாமன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.7961/2020/எம்சிஏ5) | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 30.09.2020 | 284. | இம்மாநகராட்சிக்கு தேவையான வகையில் 2020–21ம் நடப்பாண்டிற்கு எழுதுப்பொருட்கள் படிவங்கள் மற்றும் பதிவேடுகள் போன்ற இதர பொருட்கள் வாங்குவதற்கு உத்தேச செலவினத்திற்கு ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சத்திற்கு) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.6087/டி1/2020) | அனுமதிக்கப்பட்டது |
| 30.09.2020 | 285. | தஞ்சாவூர் மாநகராட்சிக்கு 2020–2021ம் ஆண்டிற்கு தற்போது தேவையான எழுதுப் பொருட்கள் மற்றும் Stationary பொருட்கள் சப்ளை செய்யும் பணிக்கு 17.09.2020–ம் அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதில் குறைந்த விலைப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |

| வ. எண் | எழுது பொருட்கள் மற்றும் பதிவேடுகள் | அளவு | தஞ்சாவூர் மாவட்ட அச்சக சேவை தொழில் கூட்டுறவு ரூ. | சிங்காரம் ஆப்செட் பிரிண்டர்ஸ் ரூ. | சுபாசினி கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | Revenue Chitta | 1 | 1500/– | 1625/– | 1600/– |
| 2 | Name Transfer Application | 1 (Book) | 250/– | 320/– | 300/– |
| 3 | பிறப்பு அறிக்கை படிவம் எண்.1 | 1 (Book) | 400/– | 475/– | 450/– |
| 4 | இறப்பிற்கான படிவம் எண்.4 | 1 (Book) | 400/– | 475/– | 450/– |

அலுவலகக்குறிப்பு:

1) ஒவ்வொரு இனத்திற்கும் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள தஞ்சாவூர் மாவட்ட அச்சக சேவை தொழில் கூட்டுறவு விலைப்புள்ளி ஏற்கலாம்.
2) நிதி நிலையை கருத்தில் கொண்டு நடப்பாண்டிற்குரிய மேற்படி தேவைப்படும் எழுது பொருட்கள், பதிவேடுகள் Stationary பொருட்கள் குறைந்த விலைப்புள்ளி நிறுவனத்திடமிருந்து வாங்கி கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.6087/2020/டி1)

| | | | |
|---|---|---|---|
| 30.09.2020 | 286. | இம்மாநகராட்சிக்கு தமிழ்நாடு அபிவிருத்தி திட்டம் 2019–20ன் கீழ் சாலை மேம்பாட்டு பணிக்கு மாமன்ற தீர்மானம் எண்.211, நாள் 06.09.2019–ன்படி அனுமதி பெறப்பட்டதைத் தொடர்ந்து, 28.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதனை மாநில அளவில் ஒரு தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான விளம்பர கட்டணம் ரூ.53,340/–ஐ வழங்கக்கோரி M/s. MARK Media Communications, சென்னை–06 என்ற நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி விளம்பரக் கட்டணம் ரூ.53,340/–ஐ அங்கீகரிக்கவும், தொகையினை விளம்பர நிறுவனத்திற்கு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | <u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) திட்டப்பணிகளின் கீழ் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டுள்ளதால் விளம்பர செலவினத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.8696/2016/எம்சிஇ1) | |
| 30.09.2020 | 287. | இம்மாநகராட்சிக்கு சொந்தமான வெண்ணாறு, திருமானூர் மற்றும் கணபதி நகர் தலைமை நீரேற்று நிலையத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்த பணியாளர்களுக்கு டிசம்பர் 2017 முதல் பிப்ரவரி 2018 வரையிலான ஊதியம் வழங்கக்கோரி ஒப்பந்ததாரர் திரு J.சீனிவாசன் என்பவரால் தொடர்ந்த வழக்கு எண்.WP.MD 12785/2018-க்கு சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் மாநகராட்சி சார்பில் ஆஜராக திரு N.திலீப்குமார், வழக்கறிஞர் அவர்கள் எதிர் வாதுரை தயார் செய்தல் மற்றும் வழக்கறிஞர் கட்டணம் ரூ.20,000/– வழங்கக் கோரியுள்ளார். எனவே மேற்கண்ட கட்டணம் வழக்கறிஞர் திரு N.திலீப்குமார் அவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்ட வழக்கறிஞர் கட்டணத்தை பொது நிதியில் இருந்து வழங்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கப்பட்டதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) வழக்கறிஞர் கடித Bill-09/Engg Sec 1/Thanjavur Corporation/2020, நாள் 08.06.2020 மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1624/2016/எம்சிஇ1) | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 30.09.2020 | 288. | இம்மாநகராட்சிக்கு சொந்தமான வெண்ணாறு, திருமானூர் மற்றும் கணபதி நகர் தலைமை நீரேற்று நிலையத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்த பணியாளர்களுக்கு டிசம்பர் 2017 முதல் பிப்ரவரி 2018 வரையிலான ஊதியம் வழங்கக்கோரி ஒப்பந்ததாரர் திரு J.சீனிவாசன் என்பவரால் தொடர்ந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்.Cont.P.(MD) No.226 of 2020-க்கு சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் மாநகராட்சி சார்பில் ஆஜராக திரு N.திலீப்குமார், வழக்கறிஞர் அவர்கள் எதிர் வாதுரை தயார் செய்தல் மற்றும் வழக்கறிஞர் கட்டணம் ரூ.12,000/– வழங்கக் கோரியுள்ளார். எனவே மேற்கண்ட கட்டணம் வழக்கறிஞர் திரு N.திலீப்குமார் அவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்ட வழக்கறிஞர் கட்டணத்தை பொது நிதியில் இருந்து வழங்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கப்பட்டதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம். | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | 3) வழக்கறிஞர் கடித Bill-15/E1/Thanjavur Corporation/2020, நாள் 18.08.2020 மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1624/2016/எம்சிஇ1) | |
| 30.09.2020 | 289. | இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.36 இம்மாநகராட்சிக்கு சொந்தமான கம்யூனிஸ்ட் அலுவலக சாலையானது சமீபத்தில் பெய்த தொடர் மழையினால் சாலை முற்றிலும் சேதமடைந்து போக்குவரத்திற்கும், பாத சாரிகளும் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே அதனை சரி செய்ய தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.7,75,000/—ஐ (ரூபாய் ஏழு இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்ட பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.7,75,000/—க்கு (ரூபாய் ஏழு இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2020—2021 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.7610/2020/எம்சிஇ4) | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 30.09.2020 | 290. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.49ல் அமைந்துள்ள அண்ணா நகர் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி இந்த ஆண்டு மாணவர்கள் தேர்வு மையமாக செயல்பட இருப்பதாகவும், எனவே மாணவர்களின் நலன் கருதி அடிப்படை வசதிகளான காற்றோட்ட வசதி, வெளிச்சம், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் செய்து தருமாறு தலைமை ஆசிரியர், மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி, அண்ணா நகர், தஞ்சாவூர் அவர்களின் கடிதம் நாள் 27.05.2020—ல் கோரப்பட்டுள்ளது.<br>இதனடிப்படையில் அண்ணா நகர் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் அடிப்படை வசதிகள் மற்றும் கட்டிடங்களை பழுது பார்த்தல் பழுது பணிகளை மேற்கொள்ளுவதற்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.48.50 இலட்சத்திற்கு (ரூபாய் நாற்பத்தெட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) அங்கீகரிக்கவும், மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் அங்கீகரிக்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) இப்பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.48.50 இலட்சத்திற்கு (ரூபாய் நாற்பத்தெட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2020—2021 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து கல்வி நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
3) இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>
4) தலைமை ஆசிரியர், மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி, அண்ணா நகர், தஞ்சாவூர் அவர்களின் கடிதம் நாள் 27.05.2020 மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>
(ந.க.எண்.5118/2020/எம்சிஇ4)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.09.2020</td>
<td>291.</td>
<td>
தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3 சுங்கான்திடல் (கோடியம்மன் கோவில் பிரிவு சாலை) சாலையானது போக்குவரத்திற்கு பயனற்ற நிலையில் குண்டும் குழியுமாக உள்ளது. மேலும் பள்ளியக்ரஹாரம் பகுதியில் பிரதான குழாய் அமைக்கும் பணி நடைபெற்று வருவதால் தற்போது பொது மக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் சுங்கான்திடல் சாலைப்பகுதியினை மாற்று சாலையாக பயன்படுத்தி வருகின்றனர். எனவே சுங்கான்திடல் சாலையில் மிகவும் மோசமான சில பகுதிகளில் மட்டும் (Advanced Patch Work) பணிகளை மேற்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.4,00,000/—ஐ (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள் 10.08.2020ல் பெறப்பட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டுள்ளது. இப்பணிக்கு 21.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>திரு M.சீனிவாசன், தஞ்சாவூர்</td><td>3,52,361.00</td><td>மதிப்பீட்டு தொகையை விட (—) 0.20% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு T.மனோகர், தஞ்சாவூர்</td><td>3,55,998.00</td><td>மதிப்பீட்டு தொகையை விட (+) 0.83% அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1) மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள மதிப்பீட்டு தொகையை விட (—) 0.20% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு M.சீனிவாசன், ஒப்பந்ததாரர், தஞ்சாவூர் அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.<br>
2) பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.7403/2020/எம்சிஇ1)
</td>
<td>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td>30.09.2020</td><td>292.</td><td>இம்மாநகராட்சிக்கு சொந்தமான வெண்ணாறு தலைமை நீரேற்று நிலையத்தில் மூன்று எண்ணம் Gas Chlorine Plants–ம் GLRS OHT, வண்டிப்பேட்டை OHT, ரெசிடன்சி பங்களா OHT, G.A.Canel OHT, VOC nagar OHT ஆகிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் அமைக்கப்பட்டுள்ள 5 எண்ணம் Gas Chlorine Plants-ம் மற்றும் ராவுத்தாபாளையம், முனியாண்டவர் காலனி, சத்யா ஸ்டேடியம் மற்றும் சேப்பனாவாரி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் 4 எண்ணம் Liquid Plants–ம் ஆக மொத்தம் 12 எண்ணம் Chlorine Plants–களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்து இயக்குவதற்கு வருடாந்திர பராமரிப்பு பணி (01.09.2020 முதல் 31.08.2020 வரை) (AMC) மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.7,70,000/–ஐ (ரூபாய் ஏழு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள் 19.05.2020ல் பெறப்பட்டு விலைப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இப்பணிக்கு 28.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>M/s. I Tech System,<br>Erode-638 002.</td><td>5,28,000.00</td><td>மதிப்பீட்டு தொகையை விட (–)<br>18.22% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>M/s. Galaxy Enterprises,<br>Dindigul – 624 001</td><td>5,80,000.00</td><td>மதிப்பீட்டு தொகையை விட (+)<br>10.16% அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1) மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள மதிப்பீட்டு தொகையை விட (–) 18.22% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு M/s. I Tech System, Erode-638 002 அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.<br>
2) பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4944/2020/எம்சிஇ4)</td><td>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது</td></tr>
<tr><td>30.09.2020</td><td>293.</td><td>தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மண்டலம்–II வார்டு எண்.21 சீனிவாசபுரம் குப்பைக்கிடங்கில் குப்பைகள் கொட்ட வரும் இம்மாநகராட்சி வாகனங்களுக்கு பாதை அமைத்து கொடுத்தல் மற்றும் தினசரி சேகரிக்கப்படும் குப்பைகளை பொக்லைன் இயந்திரத்தை கொண்டு சமன்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.16,00,000/–ஐ (ரூபாய் பதினாறு இலட்சம் மட்டும்) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள் 22.01.2020ல் வழங்கப்பட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கு 07.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td><td>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>திரு G.செந்தில்குமார், தஞ்சாவூர்</td><td>14,05,560.00</td><td>மதிப்பீட்டு தொகையை விட (–) 0.49% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு D.ஜெயக்குமார், தஞ்சாவூர்</td><td>14,15,895.00</td><td>மதிப்பீட்டு தொகையை விட (+) 0.24% அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1) மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள மதிப்பீட்டு தொகையை விட (–) 0.49% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு G.செந்தில்குமார், தஞ்சாவூர் அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.<br>
2) பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1952/2020/எம்சிஇ4)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.09.2020</td>
<td>294.</td>
<td>
தஞ்சாவூர் மாநகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையம் மற்றும் திருவையாறு பேருந்து நிலைய அபிவிருத்தி பணிகள் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் இங்கு இயங்கி வந்த பேருந்து நிலையங்கள் தற்போது கரந்தை சி.ஆர்.சி. அருகே உள்ள வாண்டையார் மைதானத்தில் தற்காலிகமாக செயல்பட்டு வருகிறது. அங்கு வரும் பொது மக்கள் பயன்பாட்டிற்காக அப்பகுதியில் செப்டிக் டேங்க் உடன் கூடிய கழிவறை வசதி அமைத்து தருதல் மற்றும் பொது மக்கள் நலன் கருதி திருவையாறு பேருந்து நிலையம் அருகே கழிப்பறை மற்றும் நிழற்குடை அமைத்து தருதல் போன்ற பணிகளை செய்வதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.15,00,000/–க்கு (ரூபாய் பதினைந்து இலட்சம்) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள் 07.07.2020ல் பெறப்பட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டுள்ளது. இப்பணிக்கு 13.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>திரு A.ராம்குமார், தஞ்சாவூர்</td><td>12,93,728.14</td><td>மதிப்பீட்டு தொகையை விட (–) 0.14% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு S.கோபி, தஞ்சாவூர்</td><td>12,99,025.39</td><td>மதிப்பீட்டு தொகையை விட (+) 0.27% அதிகம்</td></tr>
</table>
</td>
<td>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | <u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள மதிப்பீட்டு தொகையை விட (–) 0.14% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு A.ராம்குமார், ஒப்பந்ததாரர், தஞ்சாவூர் அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.6300/2020/எம்சிஇ1) | |
| 30.09.2020 | 295. | இம்மாநகராட்சிக்கு சொந்தமான TN 49 AQ 4594 POLERO வாகனத்திற்கு புதிய டயர் பொருத்தப்பட்டதினால் மேற்படி வாகனத்திற்கு வாட்டர் சர்வீஸ் மற்றும் வீல் அலைன்மெண்ட் செய்யப்பட்டது. எனவே கொரோனா தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், பணியின் அவசர அவசியத்தின் நிமித்தம் அதனை உள்ளூரில் உள்ள பணிமனையில் கொடுத்து பணி பார்த்த வகையில் அதற்குண்டான தொகை ரூ.950/–ஐ சம்பந்தப்பட்ட ஓட்டுநர் திரு L.R.ரவிச்சந்திரன் அவர்களுக்கு வழங்க மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2020–21ம் வருட திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.6650/2020/எம்சிஇ5) | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 30.09.2020 | 296. | இம்மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் 250 துப்புரவு பணியாளர்களை கொண்டு ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் 2019–20ம் ஆண்டிற்கான ஊதிய விலை விகிதத்தினை மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.20899/2019/ஜி2, நாள் 28.09.2019–ன்படி நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு செயல் திறனற்ற பணியாளர்களுக்கு ரூ.385/– என நிர்ணயம் செய்து உத்திரவு வரப்பெற்றுள்ளது. எனவே விதிகளின்படி நிலுவைத் தொகை 01.04.2019 முதல் 31.08.2019ம் தேதி வரையிலான தொகை ரூ.51,37,264/– Relyon Facility Services Pvt. Ltd., Chennai நிறுவனத்திற்கு வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களது முன் ஒப்புதல் பெற்று மேற்படி தொகையினை Relyon Facility Services Pvt. Ltd., Chennai நிறுவனத்திற்கு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மாமன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.4296/2017/எச்8) | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 30.09.2020 | 297. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இவ்வலுவலக உத்திரவின்படி 01.03.2017 முதல் 01.03.2020 வரை மூன்று வருட காலத்திற்கு Relyon Facility Services Pvt. Ltd., சென்னை நிறுவனத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு 250 துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள உத்திரவிடப்பட்டது. தற்போது ஒப்பந்தக்காலம் 01.03.2020 உடன் முடிவடைந்த நிலையில் மேற்படி ஒப்பந்தத்தை 02.03.2020 முதல் 31.08.2020 வரை ஆறு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்து உத்திரவிடப்பட்டது. தற்பொழுது கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகள் நடைபெற்று வருவதால் மேற்படி தனியார் துப்புரவு பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் உரிய நிர்வாக அனுமதி பெற இயலாத காரணத்தினால் மேற்படி ஒப்பந்தத்தை 01.09.2020 முதல் 31.10.2020 வரை 2 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்திடவும், அதற்காகும் உத்தேச செலவினம் (61 X 250 X 501) ரூ.76,40,250/—க்கு (ரூபாய் எழுபத்தாறு இலட்சத்தி நாற்பது ஆயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்)—க்கு மாமன்ற அனுமதி தேவைப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களது முன் ஒப்புதல் பெற்று மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மாமன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.4296/2017/எச்8) | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 30.09.2020 | 298. | இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 51 வார்டுகளில் கொரோனா வைரஸ் பரவா வண்ணம் தடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் தொடர் நிகழ்வாக மேற்படி பணிக்கு தேவையான நோட்டீஸ், Fine Book & Xerox Bill அடித்து வாங்கி வழங்கிய வகையில் கூடுதல் செலவினம் ரூ.19,300/—க்கும் மேலும் மேற்படி கொரோனா தடுப்பு பணிக்கு நோட்டீஸ் அச்சடித்து வாங்கி வழங்கும் பணி மேற்கொள்ள உள்ளதால் மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.30,000/—க்கும் ஆக கூடுதல் செலவினம் ரூ.49,300/—க்கு மாமன்றத்தின் அனுமதி தேவைப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று தொகை வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மாமன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3996/2020/எச்8) | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 30.09.2020 | **299.** | இம்மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிக்கான வார்டு எண்.2, பிளாக் எண்.98 நகரளவு எண்.2854 பாலோபநந்தவனம், கீழவாசல் பகுதியிலுள்ள மழை நீர் வடிகால் (சர்க்கார் – புறம்போக்கு) இடத்தில் பாதை கேட்கும் திருமதி ஆர்.சண்முகப்ரியா என்பவரால் சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் இம்மாநகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு எண்.W.P.(MD) No.5596/2020 தள்ளுபடி செய்து தீர்ப்பின் நகலை மாநகராட்சி சார்பாக ஆஜரான மதுரை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் திரு என்.திலீப்குமார் அவர்கள் அனுப்பியுள்ளார்.<br>மேலும் மேற்படி வழக்கு கட்டணமாக ரூ.12,000/– வழங்கும்படி தனது கடிதத்தில் கோரியுள்ளார்.<br>எனவே மேற்படி வழக்கு தொடர்பாக ரூ.12,000/– வழக்கு கட்டணம் வழங்குவதற்கு மாமன்ற பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.7164/2020/எம்சிஎப்2) | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 30.09.2020 | 300. | இம்மாநகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.6, பிளாக் எண்.528 நகரளவு எண்.3473/13ல் (பழைய நகரளவு எண்.2387/B1P) 741 சதுரடி நிலத்தினை மாநகராட்சி சாலை அமைக்க மாநகராட்சி எடுத்துக் கொண்டும், இதற்கு பரிவர்த்தனையாக மாநகராட்சிக்கு சொந்தமான சாலை நகரளவு எண்.2366ல் உள்ள 741 ச.அ. நிலத்தினை வாங்க மாநகராட்சி தீர்மான எண்.319 நாள் 10.06.1936ல் தீர்மானிக்கப்பட்டு மாநகராட்சி இடத்தினை மனுதாரர் பெயரில் பட்டா மாற்றம் செய்வது தொடர்பாக திருமதி S.ரஜ்னி, W/o. ராமமூர்த்தி என்பவர் சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் W.P.(MD) No.22283/2020 வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கு இம்மாநகராட்சி சார்பாக திரு என்.திலீப்குமார், வழக்கறிஞர் அவர்கள் எதிர் வாதுரை தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கு கட்டணமாக ரூ.12,000/– வழங்கும்படி கோரியுள்ளார்.<br>எனவே மேற்படி பொருள் குறித்து வழக்கறிஞர் திரு என்.திலீப்குமார் அவர்களுக்கு வழங்குவது குறித்து மாமன்ற பார்வைக்கும் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.13032/2005/எப்3) | அனுமதிக்கப்பட்டது |

நாள் : 03.10.2020
இடம்: தஞ்சாவூர்.

ஒம்./ பு.ஜானகி இரவீந்திரன்,
ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்.

// உண்மை நகல் //

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்.
தஞ்சாவூர் மாநகராட்சி.

பெறுநர்

1) மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது. (முகாம் அலுவலகம்)
2) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–600 028 அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3) உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, உடன் தணிக்கை பிரிவு, தஞ்சாவூர் மாநகராட்சி.

நகல் உதவி திட்ட அமைப்பாளர், தஞ்சாவூர் மாநகராட்சி (மாநகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய)
„ சி5–மாமன்றக்கூட்ட எழுத்தர்.
„ அலுவலக விளம்பர பலகை.